கொள்கிறேன். இதை உரிமைக் குழுவிற்கு அனுப்புகின்ற நேரத்தில், அடுத்ததாக 1981–82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைக்கான சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறவிருக்கிறது. அந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவுக்கு முன்னதாகவே இந்த உரிமைப் பிரச்சினையை உரிமைக் குழு விவாதித்து சபைக்கு அறிக்கை அளிக்கவேண்டும் என்று நாங்கள் பணிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய விளக்கங்களை அரசுத் தரப்பிலே தாங்களே கேட்டாலும் அல்லது இந்த அவையிலே வைக்கச் சொன்னாலும், நாளைக்கோ அல்லது அடுத்த நாளைக்கோ ஏற்பாடு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன்மீது செவ்வாய்க் கிழமை (3—3—1981) அன்று அரசுத் தரப்பில் இருந்து பதிலளிக்கப்பெற்ற பின் என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன்.

3. ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி

(ஆ) முதலமைச்சரின் சார்பாக அவை முன்னவர் அறிக்கை அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பேரவை முன்னவர் 107-வது விதியின்கீழ் அறிக்கை அளிப்பார்.

* திரு. துரைமுருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர். நிகழ்ச்சி நிரலில் முதலமைச்சர் இந்த அறிக்கையைப் படிப்பார் என்று இருக்கிறது. ஆனால் அமைச்சரவையில் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது என்பதை நான் உணர்கிறேன். ஆனால் முக்கியமான பிரச்சினையிலே கூட முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு வந்து இந்த அறிக்கையை படிக்க முடியவில்லை. ஏற்கனவே கேள்விகளுக்குப் பதில் சொல்வது இல்லை. இந்த அவையை அவமதிக்கிறார். திட்டமிட்டே அவமதிக்கிறார் என்று சொல்ல விரும்புகிறேன். பாராளுமன்றத்திலே குறிப்பிட்ட அமைச்சர் வந்துதான் பதில் சொல்ல வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் கேட்ட பிறகு அந்த அமைச்சருக்கு ஒரு சம்மன் அனுப்பப்பட்டது. எனவே நான் சபாநாயகர் அவர்களைக் கேட்கிறேன். முதல் அமைச்சருக்கு சம்மன் போட்டு கொண்டு வந்து, இந்த அறிக்கையைப் படிக்க வையுங்கள். இந்த அறிக்கையை அவை முன்னவர் படிப்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஏற்றுக்கொள்ள வில்லை என்பது வேறு. (குறுக்கீடு) இங்கே 9 ஆண்டுக் காலம் காமராஜர் முதலமைச்சராக இருந்திருக்கிறார். அவருக்குப் பதிலாக அவை முன்னவர்தான் எல்லா அறிக்கையையும் படித்திருக்கிறார், எல்லாச் செய்திகளையும் சொல்லி இருக்கிறார்

1981 பிப்ரவரி 27]

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, காமராஜர் அவர்கள் 3 மணி நேரம் பேசமாட்டார். ஆனால் நமது முதல் அமைச்சர் 8 மணி நேரம் கூட பேசுகிறார். எனவே இந்த அறிக்கையை அவர் வந்து படிக்கட்டும். You ask the Chief Minister. Send a summon to him and bring him. அவை முன்னவரே அறிக்கையைப் படிக்க விடமாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிக்கையைப் படிக்க விடமாட்டேன் என்று சொல்ல எந்த உறுப்பினருக்கும் உரிமை கிடையாது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இங்கே தலைவர் காமராஜரைப் பற்றி சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் காமராஜர் அவர்கள் காலை 9 மணி முதல் 1–30 மணி வரையில் இந்த அவையிலே வந்து இருப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சபையிலே இப்படிப் பட்ட முறைகள் எல்லாம் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளன. முதல்வருக்குப் பதிலாக அவை முன்னவர் அறிக்கை படிப்பது தப்பல்லஅதைத் தடுப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இன்றைக்கு அல்லது ஒரு நாளைக்கோ நடந்தால் பரவாயில்லை. திட்ட மிட்டே கேள்விக்குக் கூட பதில் சொல்வது கிடையாது.

5. திருத்த அறிக்கைகள்

(அ) ஐந்தாவது உலகத் தமிழ்மாநாட்டை ஒட்டிய திரைப் படச் செலவு—அவை முன்னவர்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பாக நான் இந்த அறிக்கையை அவை முன் வைக்கிறேன்.

'சட்டமன்றப் பேரவையில் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 4-ஆம் நாள் அன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போதும், பின்னர் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 6-ஆம் நாள் அன்று துணை நிதி அறிக்கையின் மீதான விவாதத்தின்போதும், ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு அரசு செய்த செலவு பற்றிய விவரங்களை நான் குறிப்பிடும்போது என்னிடமுள்ள தகவல்படி 'குமரிக் கண்டம்' திரைப்படத்திற்கான செலவு ரூ. 3 லட்சம் என்று குறிப்பிட்டேன்.